# நிகழ்வு அறிக்கை

தொண்டு நிறுவனங்களை ஒருங்கிணைப்பு மற்றும் வள மையத்தின் (NCRC) மூலம் நிறைவேற்றப்படும் மக்கள் பங்கேற்புடன் கூடிய நீர்பாசன மேலாண்மை திட்ட ஆலோசனைக்குழு கூட்டம் 26-09-2007 அன்று நாகப்பட்டினம் VPN ஹோட்டலில் காலை 11-00 மணி முதல் மதியம் 01-00 மணி வரை நடைபெற்றது.

## நிகழ்ச்சிகள்

1. அறிமுக உரை
2. இதுவரை நடைபெற்ற திட்டப்பணிகள் வளர்ச்சி
3. நேர்காணல் களப்பயணம் புனே (மஹாராஷ்டிரா மாநிலம்)
4. திட்ட துவக்க விழா
5. எதிர்கால திட்டமிடல்

இக்கூட்டத்திற்கு NCRC யின் ஒருங்கிணைப்பாளர் திரு. செபாஸ்டியன் ஜெயராஜ் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். தொடர்ந்து திட்டத்தின் சமூக ஒருங்கிணைப்பாளர் திரு. A. யோகன்னன் அவர்கள் அறிமுக உரை மற்றும் நிகழ்ச்சிகள் பற்றி விளக்கினார். தொடர்ந்து இதுநாள் வரை நடைபெற்ற திட்டப்பணிகள் பற்றி களப்பணியாளர்கள் திரு. சம்பத் குமார் மற்றும் திரு. பெருமாள் ஆகிய இருவரும் கணிப்பொறி மூலம் பிரதிநிதிகளுக்கு விளக்கம் அளித்தனர். தொடர்ந்து கலந்தாய்வு குழு பிரதிநிதிகளுடன் நடத்திய கலந்தாய்வில் கீழ்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

## தீர்மானம்

1. மஹாராஷ்டிரா மாநிலம் புனே மாவட்டத்தில் உள்ள பாணி பஞ்சாயத்தின் நடவடிக்கைகளை நேர்காண களப்பயணம் மேற்கொள்ள முன்னரே தீர்மானிக்கப்பட்டது. இப்பயணமானது அக்டோபர் 21-10-07 இரவு 10.00 மணிக்கு நாகையில் இருந்து புறப்பட்டு 22-10-07 காலை 11-45 மணிக்கு சென்னை மத்திய ரயில் நிலையத்தில் இருந்து சென்னை - புனே எக்ஸ்பிரஸ்ஸில் புறப்பட்டு, 26-10-07 அன்று மாலை 6-30 மணிக்கு புனே - சென்னை எக்ஸ்பிரஸ்ஸில் திரும்பி 27-10-07 காலை நாகை வர தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் திட்டம் நடைபெற உள்ள அனைத்து ஊராட்சிகளின் தலைவர்களும் கலந்துகொள்ள தீர்மானிக்கப்பட்டது. பயணத்திற்கான செலவினங்களை NCRC மூலம் வழங்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் பாசனதாரர் சங்கத்தின் பிரதிகளையும் பாணி பஞ்சாயத்துக்கு அழைத்து செல்வது பற்றி பரிசீலிக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

2. மக்கள் பங்கேற்புடன் கூடிய நீர்பாசன மேலாண்மை திட்ட துவக்க விழா டிசம்பர் இறுதி வாரம் அல்லது ஜனவரி முதல் வாரத்தில் நாகப்பட்டினத்தில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் திரு. டாக்டர் மணிசங்கர் அய்யர் அவர்களையும், மாநிலப் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களையும், மாவட்ட ஆட்சியர் அவர்களையும் மற்றும் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைப்பது என தீர்மானிக்கப்பட்டது. இதற்காக விழாக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

அவர்களின் பெயர்கள் பின்வருமாறு.

1. திரு. S.K.G திருமலைச்சாமி தலைவர், செம்பியன் மகாதேவி
2. திரு. ராஜேந்திரன், தலைவர், மகாதானம்
3. திரு. ராஜா, தலைவர், அகலங்கண்
4. திரு. ராமையன், தலைவர், வடவூர்
5. திரு. சிவக்குமார், தலைவர், தன்னிலப்பாடி
6. திரு. கணேசன், தலைவர், கருவேலங்கடை
7. திரு. அரிகிருஷ்ணன், தலைவர், வேப்பஞ்சேரி
8. திரு. சத்தியசீலன், தலைவர், மகேந்திரப்பள்ளி
9. திரு. செல்லப்பன், தலைவர், மருதம்பள்ளம்
10. திரு. அன்னாசாமி, தலைவர், மாமாகுடி

3. காட்டுர், மகேந்திரபள்ளி பஞ்சாயத்துக்களுக்கு செல்லும் பாசன வாய்க்காலான தெற்கு ராஜனில் உள்ள செடி கொடிகள் அகற்றும் திட்டத்திற்கு குழுவினால் ஒப்புதல் வழங்கப்பட்டது.

4. கடைமடை பகுதி அளவில் திட்ட ஒப்புதல் குழுவை அமைக்க கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இக்குழுவில் பொதுப்பணித்துறை அதிகாரி, பஞ்சாயத்துத் தலைவர்கள், பாசனதாரர் சங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் என்.சி.ஆர்.சி பிரதிநிதிகள் ஆகியோர் இருக்க வேண்டும் என்றும் அனைத்து திட்டங்களும் இக்குழுவினால் ஒப்புதல் பெற வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

5. திட்டப்பணிகள் மக்கள் பங்கேற்புடன் விரைவில் நடத்துவது என்று குழுவால் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மருதம்பள்ளம், கிடங்கல், குறிச்சி, மகாதானம், பாலக்குறிச்சி, சோழவித்தியபுரம், சின்னதும்பூர், காலமநல்லூர், ஒரத்தூர், தன்னிலப்பாடி, மகேந்திரப்பள்ளி, கருவேலங்கடை, அகலங்கன், வடுகச்சேரி, செம்பியன்மகாதேவி, ஆகிய பஞ்சாயத்தில் இருந்து பிரதிநிதிகள், என்.சி.ஆர்.சி முதன்மை நிர்வாக அதிகாரி திருமதி. ஆனி ஜார்ஜ், திட்டக்குழு தலைவர் திரு. பிரேம்குமார் மற்றும் களப்பணியாளர்கள் கலந்துக் கொண்டனர்.

# பாசனதாரர் சங்க பொதுக்குழு உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பம்

1. சங்கத்தின் பெயர் : ____________________
2. பஞ்சாயத்தின் பெயர் : ____________________
3. வட்டம் : ____________________
4. மாவட்டம் : ____________________
5. விண்ணப்பதாரரின் பெயர் : ____________________
6. தகப்பனார்/ கணவர் பெயர் : ____________________
7. பாலினம் : ஆண் ☐ பெண் ☐
8. வயது : ____________________
9. முகவரி : ____________________

    ____________________ ☐☐☐☐☐☐

    தொலைபேசி எண்:

10. நிலத்தின் பரப்பளவு (ஏக்கரில்) : ____________________
11. பாசன வாய்க்கால் : ____________________
12. மேலே குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையென்றும் மேலும் சங்கத்தின் விதிகள் மற்றும் செயல் முறைகளுக்குட்பட்டு செயல்படுவேன் என்றும் உறுதியளிக்கின்றேன். ஆகையால் என்னை தாங்கள் பாசனத்தாரர் சங்கத்தில் பொதுக்குழு உறுப்பினராக சேர்க்க வேண்டும் என்றும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இடம்: இப்படிக்கு

தேதி :

( )

## அலுவலக பணிக்கு மட்டும்

உிண்ணப்பம் எண் : ____________________

விண்ணப்பம் பெறப்படட நாள் : ____________________

உறுப்பினர் அட்டை எண் : ____________________